Ours bank with
Bank of Baroda

மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily

தினசரி தமிழ் நாளிதழ்

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annamavalakshi Restaurant (Veg.)
2, Town Hall Road, Madurai-625 001.

மதுரை பதிப்பு	*மணி 55	* ஓசை 307	உள்ளூர் - 05.11.2026	வியாழக்கிழமை	விலை ரூ.4/-	பக்கங்கள்-4	Website : http://maduraimaninews.com
Madurai Edition	*Vol 55	* Issue 307	வெளியூர் - 06.11.2026	வெள்ளிக்கிழமை	Price Rs. 4/-	Pages -4	Email: maduraimaninews@gmail.com

சுக்கிரன், கேது பெயர்ச்சி: 8 ராசிகளுக்கு அதிர்ஷ்டம்!

தமிழக நிறுவனத்தில் 58 வேலைவாய்ப்புகள்!

விவசாய நிலங்களை மாற்ற கூடுப்பாடு!

அக்னி வீரர்களுக்கு பணி நீட்டிப்பு!

அமெரிக்க இடைக்கால தேர்தல்! இறுதி முடிவுகள் வெளியாவதில் இழுபறி!



வாஷிங்டன், நவ. 05–

அமெரிக்க இடைக்கால தேர்தல் முடிவுகள் வெளியாவதில் தொடர்ந்து இழுபறி நீடித்து வருகின்றது.

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப்பின் பதவிக்காலத்தின் மத்தியில், அந்நாட்டு நாடாளுமன்ற பிரதிநிதிகள் அவையில் (கீழவை) உள்ள 435 இடங்களுக்கும், செனட்டில் (மேலவை) உள்ள 35 இடங்களுக்கும், 36 மாகாண ஆளுநர் பதவிகளுக்கும், சில உள்ளாட்சி நிர்வாக அதிகாரிகள் இடங்களுக்கும் இடைக்காலத் தேர்தல் செவ்வாய்க்கிழமை நடத்தப்பட்டது.

வாக்குப்பதிவு முடிந்தவுடன் செவ்வாய்க்கிழமை இரவே வாக்கு எண்ணிக்கை தொடங்கிய நிலையில், அதிபர் டிரம்ப்பின் குடியரசுக் கட்சி பெரும் தோல்வியைச் சந்தித்தது.

பிரதிநிதிகள் அவையில் (மொத்தம் 435) பெரும்பான்மை பெற 218 இடங்கள் தேவை என்ற நிலையில், ஜனநாயக கட்சி 242 இடங்களிலும், டிரம்ப்பின் குடியரசு கட்சி 151 இடங்களிலும் வெற்றி பெற்றன (இந்திய நேரப்படி நவ. 5 காலை 10 மணி நிலவரம்). இதன்மூலம் பிரதிநிதிகள் அவையானது ஜனநாயக கட்சியின் கட்டுப்பாட்டின்கீழ் வந்தது.

செனட் அவைக்கு தேர்தல் நடைபெற்ற 35 இடங்களில் 20 இடங்களில் ஜனநாயக கட்சியும், 13–இல் குடியரசு கட்சியும் வெற்றி பெற்றன. செனட் அவையில் பெரும்பான்மைக்கு 50 இடங்கள் தேவை என்ற நிலையில், ஜனநாயக கட்சி எம்.பி.க்களின் எண்ணிக்கை 54–ஆக அதிகரித்துள்ளது. குடியரசு கட்சிக்கு 44 எம்.பி.க்களே உள்ளனர். இதன்மூலம் நாடாளுமன்ற இரு அவைகளும் ஜனநாயக கட்சியின் கட்டுப்பாட்டின்கீழ் வந்தன.

இந்த நிலையில், பிரதிநிதிகள் அவையில் மீதமுள்ள 42 இடங்களுக்கும், செனட் அவையில் 2 இடங்களுக்கும் இன்னும் முடிவுகள் அறிவிக்கப்பட வேண்டியுள்ளது.

வாக்கு எண்ணிக்கை தொடங்கி 24 மணிநேரத்தைக் கடந்தும் முடிவுகள் வெளியாவதில் தொடர்ந்து இழுபறி நீடித்து வருகின்றது.

இந்த இடங்களில் தேர்தல் முடிவுகள் வெளியாக இன்னும் ஓரிரு நாள்கள் ஆகலாம் என்று கூறப்படுகிறது.

26 நகரங்களில் 1,200 கி.மீ. மெட்ரோ பாதை: பிரதமர் மோடி பெருமிதம்!



புதுடெல்லி, நவ. 05–

இந்தியாவில் மெட்ரோ ரயில் கட்டமைப்பு வேகமாக விரிவடைந்து வருவதாகப் பிரதமர் மோடி தெரிவித்துள்ளார். 2014–ஆம் ஆண்டில் 5 நகரங்களில் 248 கி.மீ. மட்டுமே இருந்த மெட்ரோ பாதைகள், தற்போது 26 நகரங்களில் 1,200 கி.மீ. ஆக அதிகரித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

தினமும் ஒரு கோடிக்கும் அதிகமானோர் மெட்ரோ ரயில்களில் பயணிப்பதாகவும், இதனால் போக்குவரத்து நெரிசல் குறைந்து, நேரம் மிச்சமாவதுடன் உற்பத்தித் திறனும் அதிகரிப்பதாகவும் தெரிவித்துள்ளார். 2014–க்கு முந்தைய வேகத்தில் திட்டங்கள் செயல்பட்டிருந்தால் புனே போன்ற நகரங்கள் மெட்ரோ சேவைக்காக மேலும் பல ஆண்டுகள் காத்திருக்க வேண்டியிருந்திருக்கும் என்றும் பிரதமர் மோடி கூறியுள்ளார்.

முதல்வரின் அலுவல்பூர்வ இல்லமாக 'பாமணி இல்லம்'!



சென்னை, நவ. 05–

முதல்வரின் அலுவல்பூர்வ இல்லமாக மாறப்போகும் பாமணி இல்லத்தில் இன்று காலை முதல்வர் ச. ஜோசப் விஜய் ஆய்வு மேற்கொண்டார்.

முதல்வர் விஜய், அலுவலகப் பணிகளுக்காக தலைமைச் செயலகத்துக்கு நீலாங்கரை இல்லத்தில் இருந்து சென்று வருகிறார். நீலாங்கரை முதல் தலைமைச் செயலகம் இடையிலான சாலைகளில் முதல்வர் விஜய்யின் பயணத்தின்போது போக்குவரத்து நிறுத்தப்படுகிறது. இதனால், மக்களும் அவதிக்குள்ளாவதாக சர்ச்சை எழுந்தது.

இந்த நிலையில், சென்னை பசுமை வழிச்சாலையில் பொதிகை வளாகத்தில் அமைந்துள்ள பாமணி இல்லத்தை முதல்வர் விஜய்யின் அலுவல்பூர்வ இல்லமாக மாறவிருப்பதாகத் தகவல்கள் வெளியாகின.

பல ஆண்டுகளாக அரசு விருந்தினர் இல்லமாக இருந்த பாமணி இல்லத்தை நவீன வசதிகளுடன், அதிநவீன பாதுகாப்பு அம்சங்களுடன் புதிய முகாம் அலுவலகமாக மாற்றும் பணிகளை பொதுப்பணித்துறையினர் கடந்த சில வாரங்களாக மேற்கொண்டு வந்தனர்.

இந்த நிலையில், பாமணி இல்லத்தை முதல்வர் விஜய் இன்று காலை நேரில் ஆய்வு செய்தார். அதிகாரிகளுடன் பாதுகாப்பு ஏற்பாடுகள், அலுவலக அமைப்பு குறித்து அவர் ஆலோசனை நடத்தினார்.

இதனிடையே, முதல்வரின் புதிய அலுவல்பூர்வ இல்லத்துக்கு 'வெற்றி இல்லம்' என்று பெயர் மாற்றப்படவுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளது.

சென்னை பசுமை வழிச்சாலையில் உள்ள அமைச்சர்கள் மற்றும் அரசு உயர் அதிகாரிகளின் இல்லங்களுக்கு தமிழகத்தில் ஓடும் ஆறுகளின் பெயர்கள் வைக்கப்பட்டுள்ளது. அதன்படி, தஞ்சாவூர் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் ஓடும் காவிரி ஆற்றின் கிளை நதியான "பாமணி ஆறு" பெயர் வைக்கப்பட்டது.



மகேஷ் வழக்கில் 'மருதமலை' காமெடி!

சென்னை, நவ. 05–

ஊழல் வழக்கில் கைதான முன்னாள் அமைச்சர் மகேஷின் ஜாமின் மனு மீதான விசாரணையில், லஞ்ச ஒழிப்புத்துறை இருக்கும்போது மத்திய குற்றப்பிரிவு ஏன் வழக்குப் பதிவு செய்தது என அவரது தரப்பு வழக்கறிஞர்கள் கேள்வி எழுப்பினர். மேலும், மகேஷ் கறைபடியாத கரங்களுக்குச் சொந்தக்காரர் என்றும் வாதிட்டனர்.

விசாரணை அமைப்பைத் தேர்வு செய்வது குற்ற ஞ்சாட்டப்பட்டவரின் உரிமையல்ல எனச் சில வழக்கறிஞர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். இந்த வாதம், நடிகர் வடிவேலுவின் 'மருதமலை' திரைப்பட நகைச்சுவைக் காட்சியை நினைவூட்டுவதாக விமர்சிக்கப்பட்டுள்ளது.

வங்கதேசத்தில் தொழிலாளர் போராட்டம்: 600 ஆடைத் தொழிற்சாலைகள் மூடல்!



டாக்கா, நவ. 05–

வங்கதேசத்தில் ஊதிய உயர்வு கோரி ஜவுளித் தொழிலாளர்கள் தொடர்ந்து 5–வது நாளாக வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. இதனால் 600–க்கும் மேற்பட்ட ஆடைத் தொழிற்சாலைகள் மூடப்பட்டு ள்ளதாகக் கூறப்படுகிறது. தற்போதைய குறைந்தபட்ச ஊதியமான 12,500 டாக்காவை 30,000 டாக்காவாக உயர்த்தக் கோரி லட்சக்கணக்கான தொழிலாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். நாட்டின் பணவீக்கம் 8 சதவீதமாக உள்ளதால் அத்தியாவசியச் செலவு களைச் சமாளிக்க முடியவில்லை எனத் தொழிலாளர்கள் தெரிவித்துள்ள னர். டாக்கா, காஸிப்பூர், சாவர், அஷுலியா உள்ளிட்ட தொழில் நகரங்க ளில் போராட்டம் தீவிரமடைந்துள்ளது. சாலை மறியல், வன்முறைச் சம்பவங்களைத் தொடர்ந்து பாதுகாப்புப் படையினர் குவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்க ப்பட்டுள்ளது. நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 10 முதல் 13 சதவீதப் பங்களிப்பைக் கொண்ட ஜவுளித் துறை பாதிக்கப்பட்டுள்ள நிலையில், ஊதியப் பிரச்சினைக்குத் தீர்வு காண ஆறு பேர் கொண்ட ஊதிய வாரியம் அமைக்கப்பட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஹார்மோஸ் பாதையில் இந்தியா!

4 நாடுகளுக்கு பச்சைக்கொடி! கச்சா எண்ணெய், எரிவாயு தடைகள் தளர்வு!

போர்ப் பதற்றத்திலும் இந்தியாவுக்கு நிம்மதி!



புதுடெல்லி, நவ. 05–

மேற்காசியாவில் நீடிக்கும் போர்ப் பதற்றத்திற்கு மத்தியில், ஹார்மோஸ் நீரிணை வழியாக இந்தியக் கப்பல்கள் தடையின்றிப் பயணிக்க ஈரான் சிறப்பு அனுமதி வழங்கியுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த பிப்ரவரி மாதம் தொடங்கிய அமெரிக்கா ஈரான் மோதலால் ஹார்மோஸ் நீரிணை மூடப்பட்டதாகவும், இதனால் சர்வதேச கப்பல் போக்குவரத்து கடுமையாகப் பாதிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. உலக நாடுகளில் கச்சா எண்ணெய் மற்றும் எரிவாயு விநியோகத்தில் நெருக்கடி ஏற்பட்டது.

இந்தியாவின் கச்சா எண்ணெய் வர்த்தகத்தில் சுமார் 30 சதவீதமும், எரிவாயு வர்த்தகத்தில் 90 சதவீதமும் ஹார்மோஸ் நீரிணையைச் சார்ந்துள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்த முக்கியக் கடல்வழிப் பாதையில் ஏற்பட்ட தடையால் இந்தியாவின் எரிபொருள் இறக்குமதியும் பாதிக்கப்பட்டது.

இந்நிலையில், இந்தியா, சீனா, கத்தார், ஈராக் ஆகிய நான்கு நாடுகளின் கப்பல்களுக்குச் சிறப்பு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக நவம்பர் 3–ஆம் தேதி ஈரான் பாதுகாப்பு மற்றும் வெளியுறவுக் கொள்கைக் குழு தெரிவித்ததாகச் செய்தி வெளியாகியுள்ளது. மேலும், இந்தியாவிலிருந்து மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களை ஈரானுக்கு அனுப்புவதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இந்த நடவடிக்கையால் இந்தியாவுக்கான கச்சா எண்ணெய் மற்றும் எரிவாயு விநியோகம் சீரடையும் வாய்ப்பு உருவாகியுள்ளது. அதேநேரத்தில், மேற்காசியாவில் போர்ப் பதற்றம் தொடர்வதால் சர்வதேச கப்பல் போக்குவரத்தில் பாதுகாப்புச் சவால்கள் நீடிக்கின்றன.

ஈரானின் இந்த அறிவிப்பு இந்தியாவின் எரிசக்தி பாதுகாப்புக்கும், சர்வதேச வர்த்தகத்திற்கும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

கார்பன் உமிழ்வைக் குறைக்க அதிரடி பிளான்.! விரைவில் விமான எரிபொருளில் பசுமை ஜெட் எரிபொருள் கலப்பது!



டெல்லி, நவ. 05–

சர்வதேச விமானங்களில் பயன்படுத்தப்படும் ATF விமான எரிபொருளில், 1% பசுமை ஜெட் எரிபொருளை (SAF) கலப்பதை கட்டாயமாக்க ஒன்றிய அரசு திட்டமிட்டுள்ளது. 2027 ஜனவரி முதல் இதை அமல்படுத்தி படிப்படியாக 20% வரை கட்டாயமாக்குவதற்கான வரைவு கொள்கையை ஒன்றிய அரசு வெளியிட்டது. பசுமை ஜெட் எரிபொருளானது விவசாய கழிவுகள், பயன்படுத்தப்பட்ட சமையல் எண்ணெய் உள்ளிட்டவை மூலம் தயாரிக்கப்படுகிறது.

கார்பன் உமிழ்வைக் குறைப்பதற்காக, சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகம் இந்த தேசியக் கொள்கை வரைவை வெளியிட்டுள்ளது. இந்த வரைவு முன்மொழிவின்படி, 2028–க்குள் பசுமை ஜெட் எரிபொருள் கலப்பு 2 சதவீதமாகவும், 2030–க்குள் 5 சதவீதமாகவும் அதிகரிக்கப்படும். மேலும் 2040–க்குள் 20% வரை கலக்க திட்டமிடப்பட்டுள்ளது.

ஆனால் இதில் சில சவால்கள் இருப்பதை நிபுணர்கள் சுட்டிக்காட்டி உள்ளனர். பசுமை ஜெட் எரிபொருள் சாதாரண எரிபொருளை விட விலை அதிகம் என்பதால், விமானக் கட்டணங்கள் உயர வாய்ப்புள்ளது. அதே போல நிர்ணயிக்கப்பட்டுள்ள இலக்குகளை எட்ட இந்தியாவில் போதிய உற்பத்தி ஆலைகளும், கழிவு சேகரிப்பு கட்டமைப்புகளும் போதுமானதாக இல்லாததால், அதற்கான ஏற்பாடுகள் வேகமாக மேம்படுத்தப்பட வேண்டும் என்றும் நிபுணர்கள் கூறி உள்ளனர். இதனிடையே எரிபொருள் நிறுவனங்கள் அதிக அளவில் பசுமை எரிபொருளை உற்பத்தி செய்வதை ஊக்குவிக்கும் வகையில்,ரூ.500 கோடி மதிப்பிலான நிதி உதவி உள்ளிட்ட ஆதரவு நடவடிக்கைகளை வழங்க அரசு திட்டமிட்டு வருவதாகவும் தகவல் வெளியாகி உள்ளது.

திருவண்ணாமலை மகாதீபம்: பக்தர்கள் மலையேறத் தடை!!



திருவண்ணாமலை, நவ. 05–

திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயில் கார்த்திகை தீபத் திருவிழாவையொட்டி வருகிற நவ. 24 ஆம் தேதி பக்தர்கள் மலையேற தடை விதிக்கப்பட்டுள்ளது.

திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயிலில் பிரசித்தி பெற்ற கார்த்திகை தீப திருவிழா வருகிற நவ. 24 ஆம் தேதி வெகு விமரிசையாக நடைபெற உள்ளது. இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

கார்த்திகை தீபத் திருவிழாவையொட்டி தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் மக்கள் கூடுவார்கள்.

நவ. 24 அன்று மாலை 2,668 அடி உயர மலையில் மகாதீபம் ஏற்றப்படும். அன்று பக்தர்கள் மலையேற தடை விதித்து மாவட்ட ஆட்சியர் உத்தரவிட்டுள்ளார். தற்போது வடகிழக்கு பருவமழை பெய்து வருவதால் மண்சரிவு ஏற்படும் அபாயம் இருப்பதால் தீபத் திருவிழாவின் போது மலை ஏற பக்தர்களுக்கு இந்த ஆண்டும் தடை விதிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

டிஎன்பிஎஸ்சி குரூப் 4: விண்ணப்பிக்க அவகாசம் நீட்டிப்பு!



சென்னை, நவ. 05–

அரசுப் பணியில் சேர விரும்பும் தேர்வர்களுக்கு இந்த அறிவிப்பு கூடுதல் வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது. விண்ணப்பிக்கத் தவறியவர்கள் நீட்டிக்கப்பட்ட கால அவகாசத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.


விண்ணப்பதாரர்கள் தங்களது கல்வித் தகுதி, வயது வரம்பு, இடஒதுக்கீடு மற்றும் தேவையான சான்றிதழ்கள் குறித்த விவரங்களைச் சரிபார்த்து விண்ணப்பிக்க வேண்டும்.

மேலும், விண்ணப்பத்தில் உள்ள தவறுகளைத் திருத்துவதற்கான வாய்ப்பு, தேர்வுக் கட்டணம் மற்றும் தேர்வு நடைமுறைகள் குறித்த அறிவுறுத்தல்களையும் கவனமாகப் படிக்க வேண்டும்.

புதிய கடைசி தேதி உள்ளிட்ட அதிகாரப்பூர்வ விவரங்களை தேர்வர்கள் www.tnpsc.gov.in இணையதளத்தில் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

தலையங்கம்
மதுரை மணி
வியாழக்கிழமை 05.11.2026
விசுவாவசு தமிழ் வருடம்
ஐப்பசி மாதம் 19-ம் தேதி

22 மொழிகளில் ஒலிக்கப் போகும் திருக்குறள்!



தமிழ் என்பது வெறும் மொழியல்ல; அது மனித நாகரிகத்தின் அறிவுக் கருவூலம்! அந்த அறிவுக் கருவூலத்தின் அழியாத பொக்கிஷம்தான் திருவள்ளுவர் அருளிய திருக்குறள். காலத்தையும், தேசத்தையும், மொழிகளையும் கடந்து மனிதகுலத்துக்கே வாழ்வியல் நெறிகளை எடுத்துரைக்கும் திருக்குறளை இந்தியாவின் 22 மொழிகளிலும் ஆங்கிலத்திலும் கொண்டு சேர்க்கும் முயற்சி, தமிழின் பண்பாட்டுப் பயணத்தில் குறிப்பிடத்தக்க முன்னெடுப்பாகும்.

காசி தமிழ் சங்கமம் 5.0 நிகழ்வின் வாயிலாக மத்திய செம்மொழித் தமிழாய்வு நிறுவனம் மேற்கொள்ளும் இந்த முயற்சி பாராட்டுக்குரியது. தமிழின் தொன்மையையும், அதன் உயர்ந்த சிந்தனைகளையும் பிற மொழி மக்களிடம் கொண்டு சேர்ப்பது தேசிய ஒருமைப்பாட்டிற்கும் பண்பாட்டுப் புரிதலுக்கும் வழிவகுக்கும்.

திருக்குறள் தமிழர்களுக்கு மட்டும் சொந்தமானதல்ல; மனிதகுலம் முழுவதற்குமான அறநெறிப் பொக்கிஷம்!

அறம், பொருள், இன்பம் என்ற மூன்று அடிப்படைகளில் மனித வாழ்க்கையை வழிநடத்தும் திருக்குறள், ஆட்சியாளர்களுக்கும் பொதுமக்களுக்கும் ஒரே நேரத்தில் அறிவுரை வழங்கும் ஆற்றல் கொண்டது. அரசியல், பொருளாதாரம், கல்வி, நீதி, ஒழுக்கம், மனிதநேயம் என அனைத்துத் துறைகளுக்கும் பொருந்தக்கூடிய கருத்துகளை இரண்டே அடிகளில் எடுத்துரைத்த பெருமை திருவள்ளுவருக்கே உரியது.

ஆனால், மொழிபெயர்ப்புடன் மட்டும் இந்த முயற்சி நின்றுவிடக் கூடாது. இந்தியாவின் அனைத்துப் பள்ளிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் திருக்குறளின் அறநெறிக் கருத்துகளை அறிமுகப்படுத்த வேண்டும். மொழிபெயர்ப்புகளில் மூலக்குறளின் பொருள் சிதையாமல் பாதுகாக்கப்பட வேண்டும். இளம் தலைமுறையினர் எளிதில் அணுகும் வகையில் மின்னூல்கள், ஒலிநூல்கள், இணையவழிக் கல்வி வளங்கள் உருவாக்கப்பட வேண்டும்.

தமிழின் பெருமையைப் பேசுவது மட்டும் போதாது; அதன் உயர்ந்த சிந்தனைகளை உலகம் முழுவதும் கொண்டு செல்ல வேண்டும். அதேவேளையில், தமிழ்மொழியின் வளர்ச்சிக்கும், தமிழ்வழிக் கல்விக்கும், தமிழ் ஆய்வாளர்களுக்கும் உரிய முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும்.

திருவள்ளுவரை உலகம் அறியட்டும்; திருக்குறளின் அறநெறிகளை மனிதகுலம் பின்பற்றட்டும்!

காசியிலிருந்து தொடங்கும் இந்தப் பண்பாட்டுப் பயணம் இந்தியாவின் அனைத்து மாநிலங்களையும் கடந்து உலக நாடுகளுக்கும் விரிவடைய வேண்டும். திருக்குறள் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்படுவது ஒரு சாதனை; அதன் கருத்துகள் மனிதர்களின் வாழ்க்கையில் செயல்படுத்தப்படுவதே உண்மையான வெற்றி!

தமிழ் வாழ்க! திருக்குறள் உலகெங்கும் ஒலிக்கட்டும்!

ஆசிரியர்,
மதுரை மணி நாளிதழ்

விவசாய நிலங்களை மாற்ற கட்டுப்பாடு!

சென்னை, நவ. 05–

விவசாய நிலங்களை விவசாயம் அல்லாத பயன்பாட்டிற்கு மாற்றுவற்கு பல்வேறு கட்டுப்பாடுகளை தமிழ்நாடு அரசு விதித்துள்ளது.

விவசாய நிலங்களை விவசாயம் அல்லாத நிலமாக மாற்ற, ஏற்கனவே உள்ள விதிகளில் புதிய திருத்தங்களை தமிழ்நாடு அரசு கொண்டு வந்துள்ளது.



இதன்படி விளைநில பயன்பாட்டு நிலமாக மாற்றவும், கட்டுமானங்கள் மேற்கொள்ளவும் பல்வேறு கட்டுப்பாடுகளை தமிழ்நாடு அரசு விதித்துள்ளது.

விவசாயம் அல்லாத நிலமாக மாற்றி கட்டுமானப்பணிகள் மேற்கொள்ள ஆவணங்களை சமர்ப்பிப்பது அவசியம் என்றும், நிலத்தின் கிரயம் அல்லது குத்தகைப் பத்திரம், பட்டா நகல் என 9 ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வெங்காயம் கொள்முதல் ஆணை ரத்து ஏன்? தமிழ்நாடு அரசு விளக்கம்!

சென்னை, நவ. 05–

மகாராஷ்டிரத்தில் 400 மெட்ரிக் டன் வெங்காயம் கொள்முதல் செய்யப்படவிருந்த நிலையில், வெங்காயத்தின் தரத்தில் குறை இருந்ததாகக் கூறி கொள்முதல் ஆணையை தமிழக அரசு ரத்து செய்தது. இதனிடையே, வெங்காயக் கொள்முதல் ஆணை ரத்து விவகாரம் குறித்து தவெக அரசை எதிர்க்கட்சியினர் விமர்சித்தனர்.

இந்த நிலையில், ஆணை ரத்து குறித்து தமிழக அரசு சார்பில் அளிக்கப்பட்டுள்ள விளக்கக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது, "நியாய விலைக் கடைகள் மற்றும் கூட்டுறவு அங்காடிகளில் பொதுமக்களுக்கு மானிய விலையில் வெங்காயம் வழங்குவதற்காக NAFED (இந்திய தேசிய வேளாண் கூட்டுறவு சந்தைப்படுத்துதல் கூட்டமைப்பு) நிறுவனத்திடமிருந்து 400 மெட்ரிக் டன் வெங்காயம் கொள்முதல் செய்ய கடந்த அக்டோபர் மாதம் தமிழ்நாடு கூட்டுறவு



விற்பனை இணையம் (TNCC) ஆணை வழங்கியிருந்தது.

மகாராஷ்டித்தில் உள்ள நாசிக்கிற்கு கூட்டுறவுத்துறை அதிகாரிகள் ஆய்வு செய்ய சென்றபோது, தமிழ்நாட்டுக்கு வெங்காயம் ஒரு நாள் முன்பே அனுப்பி வைக்கப்பட்டது தெரியவந்தது. உடனே அங்கு இருப்பு வைக்கப்பட்டிருந்த வெங்காயத்தை ஆய்வு செய்தபோது. 'ஏ' தர வெங்காயத்துடன் அழுகிய மற்றும் நிராகரிப்புத் தர வெங்காயம் கலந்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து கொருக்குப்பேட்டைக்கு அனுப்பி வைக்கப்பட்ட வெங்காய மூட்டைகளை, அக். 31–ல் கூட்டுறவுத்துறை அதிகாரிகள் கொண்ட குழு ஆய்வு செய்தது. அப்போது மூட்டைகளில் 50.2 சதவிகித வெங்காயம் நிர்ணயிக்கப்பட்ட 45 மி.மீ அளவைவிட குறைவாகவும், 20 முதல் 26 சதவிகிதம் வரை அழுகியதோடு, முளைத்த மற்றும் பூஞ்சை பாதித்த வெங்காயங்கள் கழிவாக இருந்தது தெரியவந்தது.

பொருளின் தரம் சரியாக இருந்தால் மட்டுமே கொள்முதல் செய்யப்படும். வெங்காயத்தின் தரம் குறைவாக இருந்ததால் பொதுமக்களின் நலன்கருதி கொள்முதல் ஆணை ரத்து செய்யப்பட்டது. முன்பணம் எதுவும் வழங்கப்படாத நிலையில், கொள்முதல் ஆணை அக். 31–ல் ரத்து செய்யப்பட்டதால், அரசுக்கு எந்தவித இழப்பும் ஏற்படவில்லை. தவறான தகவலைப் பரப்பாதீர்" என்று குறிப்பிட்டுள்ளனர்.

கரூர் அரசுப் பணி ரத்து! விளக்க மனு அளிக்க தமிழக அரசுக்கு உச்சநீதிமன்றம் 4 வாரங்கள் கெடு!

சென்னை, நவ. 05–

கரூரில் கடந்தாண்டு செப். 28–ல் நடைபெற்ற தவெக தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் சிக்கி 41 பேர் பலியாகினர். இந்த சம்பவம் தொடர்பாக உச்ச நீதிமன்றத்தில் வழக்கு விசாரிக்கப்பட்டு வருகிறது.

இதனிடையே, கரூர் கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தோருக்கு தவெக அரசில் பணி நியமன ஆணை வழங்கப்பட்டது. இருப்பினும், கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தோர் குடும்பத்தாருக்கு அரசுப் பணி வழங்கும் உத்தரவுக்கு சென்னை உயர்நீதிமன்றம் ரத்து செய்தது. இதனைத் தொடர்ந்து,



உயர்நீதி மன்றத்தின் உத்தரவுக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் தமிழக அரசு மேல்முறையீடு செய்தது. இதனையடுத்து, உயர்நீதிமன்றத்தின் உத்தரவுக்கு உச்சநீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்து உத்தரவிட்டது.

உச்சநீதிமன்றத்தில் புதன்கிழமையில் இந்த வழக்கு நீதிபதிகள் ஜே.பி.பார்திவாலா, மன்மோகன் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்த நிலையில், வழக்கில் விளக்க மனு அளிக்க தமிழக அரசு சார்பில் 2 வார அவகாசம் கோரப்பட்டது. இதனையடுத்து, விளக்க மனு அளிக்க தமிழக அரசுக்கு 4 வார அவகாசம் அளித்து, வழக்கை டிசம்பர் 8 ஆம் தேதிக்கு உச்சநீதிமன்றம் ஒத்திவைத்தது.

அன்பில் மகேஸுக்கு அடுத்ததாக உயர்கல்வித் துறையில் விசாரணை! அமைச்சர் மரியவில்சன்!

சென்னை, நவ. 05–

திமுக முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஸ் கைது குறித்து செய்தியாளர்களுடன் அமைச்சர் மரியவில்சன் பேசியதாவது, "முதல்வரின் மேசையில் இருக்கும் 3 கோப்புகளில் இருந்து ஒரு கோப்பு மட்டும் திறக்கப்பட்டதற்கே திமுகவினர் அலறுகின்றனர். செல்லும் திருமண நிகழ்வுகளிலெல்லாம் தவெக அரசு மீது அவதூறு கூறி வருகின்றனர். மீதமுள்ள கோப்புகளைத் திறந்தால் என்ன நடக்கும் எனத் தெரியவில்லை. பள்ளிக்கல்வித் துறையில் நடந்த ஊழல் மன்னிக்க முடியாதது.

அடிப்படையான சுயமரியாதை, சமத்துவம், சமூக நீதி கற்றுக்கொடுக்கும்



பள்ளிக்கல்வித் துறையில் ஊழல் செய்துவிட்டு, தற்போது சிறையில் உணவு வேண்டும், பெயில் வேண்டும் என்று (அன்பில் மகேஸ்) சொல்கிறார்.

இதேபோல், உயர்கல்வித் துறையும் கண்டிப்பாக விசாரிக்கப்படும்" என்று தெரிவித்தார். கடந்த திமுக ஆட்சியில் 1,000–க்கும் மேற்பட்ட தனியார் பள்ளிகளுக்கு பல்வேறு அங்கீகாரம், அனுமதிகளைப் பெற்றுத் தருவதாகக் கூறி, ரூ.100 கோடிக்குமேல் சட்டவிரோதமாக வசூலித்ததாக முன்னாள் அமைச்சர் பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் மீது புகார் அளிக்கப்பட்டது. இது தொடர்பாக உயர்நீதிமன்றத்தில் வழக்கு நடந்து வருகிறது.

இந்த நிலையில், கடந்த ஆட்சியில் இருந்த உயர்கல்வித் துறையிலும் விசாரணை நடத்தப்படவிருப்பதாக அமைச்சர் மரியவில்சன் தெரிவித்துள்ளார்.

கடந்த திமுக ஆட்சியில் உயர்கல்வித் துறை அமைச்சராக பொன்முடியும், கோவி. செழியன் பதவி வகித்தது குறிப்பிடத்தக்கது.

ரூ. 2 கோடி லஞ்சம்? ஞானேஷ் குமார் மீது புதிய வழக்கு பதிவுசெய்ய கேரள அரசு அனுமதி!

கேரளா, நவ. 05–

கேரள மாநிலத்தில் 2006–ல் பொதுப்பணித் துறைச் செயலாளராக ஞானேஷ் குமார் (தற்போதைய தலைமைத் தேர்தல் ஆணையர்) இருந்து வந்தார். 2006–ல் இவர் பணியில் இருந்த காலத்தில் திருவனந்தபுரம் – கோட்டயம் இடையே சாலை விரிவாக்கப் பணியும் நடந்தது. இந்தப் பணிகளின்போது சாலை ஒப்பந்தத்துக்கான ரசீது வழங்குவதற்காக ரூ. 2 கோடி லஞ்சம் கேட்டதாக சாலை ஒப்பந்ததாரர் சாஜன் புகார் அளித்துள்ளார்.

20 ஆண்டுகளுக்குப் பிறகு ஞானேஷ் குமார் மீது அளிக்கப்பட்ட புகாரையடுத்து, அவர் மீது வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்துவது தொடர்பாக மாநில அரசிடம் லஞ்ச ஒழிப்புத் தனிப்பிரிவு அனுமதி கோரியது. இதனைத் தொடர்ந்து, ஞானேஷ் குமார் மீது வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி மாநில உள்துறை அமைச்சகம் அனுமதி அளித்துள்ளது.

முன்னதாக, இதே காலகட்டத்தில் மாநில போக்குவரத்துத் திட்டத்தில் பணியாற்றிய மலேசியாவை சேர்ந்த பொறியாளர் லீ சீ பீன் தற்கொலை



செய்து கொண்டார். மேலும், அவரின் தற்கொலைக் குறிப்பில் அப்போதைய பொதுப்பணித் துறைச் செயலாளர் ஞானேஷ் குமாரின் (தற்போதைய தலைமைத் தேர்தல் ஆணையர்) பெயர் இடம்பெற்றிருந்தது. மலேசிய நிறுவனம் சேர்ந்திருந்த இந்தச் சாலைப் புனரமைப்புத் திட்டத்துக்கு நிதியை விடுவிக்க லஞ்சம் கோரியதாகவும், பணம் செலுத்துவதில் தாமதம் என்ற குற்றச்சாட்டுகளும் தற்கொலைக் குறிப்பில் இருந்தன.

இந்த சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தப்பட்டு வந்த நிலையில், ஞானேஷ் குமார் பணியிட மாற்றம் செய்யப்பட்டு, பின்னர் மத்திய அரசுப் பணியிலும் சேர்ந்தார். இதனைத் தொடர்ந்து, இந்த வழக்கின் விசாரணையும் கிடப்பில் போடப்பட்டது.

இந்த நிலையில், 2006–ல் கிடப்பில் போடப்பட்ட ஞானேஷ் குமார் மீதான விசாரணையை மீண்டும் தொடங்க கேரள லஞ்ச ஒழிப்புத் துறைக்கு மாநில உள்துறை அமைச்சகம் உத்தரவிட்டது. மேலும், 2006–ல் இந்த வழக்கில் நடத்தப்பட்ட விசாரணையின் அனைத்து கோப்புகளையும் சமர்ப்பிக்குமாறு அரசு உத்தரவிட்டுள்ளது.

வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தத்தில் முறைகேடு நடந்ததாகக் கூறி, தற்போது தலைமைத் தேர்தல் ஆணையராக இருந்துவரும் ஞானேஷ் குமார் பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி கரப்பான் பூச்சி ஜனதா கட்சியினர் போராட்டம் நடத்தி வருகின்றனர். இந்தப் போராட்டத்துக்கு காங்கிரஸ், ஆம் ஆத்மி உள்பட மமதா பானர்ஜி தரப்பு திரிணமூல் காங்கிரஸும் ஆதரவு தெரிவித்து வருகின்றனர்.

இந்த நிலையில், பழைய வழக்கின் விசாரணை மீண்டும்முடுக்கிவிடப்பட்டது மற்றும் புதிய வழக்குப்பதிவும் ஞானேஷ் குமாருக்கு நெருக்கடியை அதிகரித்துள்ளது.

கடந்த அக்டோபர் மாதத்தில் பத்திரப்பதிவு துறையில் ரூ.1,950 கோடி வருவாய்!



சென்னை, நவ. 05–


கடந்த மாதம் (அக்டோபர்) பதிவுத்துறை அலுவலர்களின் பணித்திறன் குறித்த ஆய்வுக்கூட்டம், சென்னை பாரிமுனை வடக்கு மாவட்ட பதிவாளர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்றது. அமைச்சர் லோகேஷ் தமிழ்செல்வன் தலைமை தாங்கி பேசினார்.

அப்போது அவர் கூறியதாவது:–

கடந்த ஆகஸ்டு மாதம் 17–ந் தேதி தொடங்கி வைக்கப்பட்ட வருகையில்லா ஆவணப்பதிவின் மூலம் கடந்த 3–ந் தேதி வரை 2,46,260 மனைப்பிரிவு, அடுக்குமாடி குடியிருப்பு ஆகியவற்றின் முதல் விற்பனை ஆவணங்கள், வங்கி மற்றும் நிதி நிறுவனங்களுக்கான உரிமை ஒப்படைப்பு ஆவணம் மற்றும் ரசீது ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

பத்திரப்பதிவு துறையில் 2026 அக்டோபர் மாதத்தில் வருவாய் ரூ.1,950 கோடி ஈட்டப்பட்டுள்ளது. இது கடந்த 2025–ம் ஆண்டு அக்டோபர் மாத வருவாயைக் காட்டிலும் ரூ.147 கோடி அதிகமாகும். பதிவு செய்த அன்றே தாமதம் ஏற்படாமல் ஆவணங்களை பதிவு நாளன்றே வழங்க மாவட்டப் பதிவாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. வருவாய் இழப்பைத் தடுக்கவும், மாநிலத்தின் நிதி இலக்குகளை அடையவும் அனைத்து அதிகாரிகளும் அர்ப்பணிப்புடன் செயல்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

முன்னதாக அவர், பதிவுத்துறையில் ஏஐ தொழில்நுட்பத்தின் உதவியோடு நீதிமன்ற வழக்குகளை கண்காணித்து, துறையின் சட்டப்பூர்வ நடவடிக்கைகளை துரிதமாக செயல்படுத்தும் ஏஐ தொழில்நுட்ப செயலியின் பயன்பாட்டினை தொடங்கி வைத்தார்.



சுக்கிரன், கேது பெயர்ச்சி: 8 ராசிகளுக்கு அதிர்ஷ்டம்!



நவம்பர் மாதத்தில் சுக்கிரன் வக்ர நிவர்த்தி மற்றும் கேது பெயர்ச்சி காரணமாக 8 ராசிக்காரர்களின் வாழ்க்கையில் அதிரடியான மாற்றங்கள் ஏற்படவுள்ளதாக ஜோதிடக் கணிப்புகள் தெரிவிக்கின்றன. தொழில் வளர்ச்சி, பணவரவு, பதவி உயர்வு, சொத்து சேர்க்கை, குடும்ப மகிழ்ச்சி உள்ளிட்ட நற்பலன்கள் கிடைக்கக்கூடும் எனக் கூறப்படுகிறது.

ஜோதிட சாஸ்திரத்தில் செல்வம், சுகபோகம், காதல், ஆடம்பரம் மற்றும் மகிழ்ச்சிக்கு அதிபதியாக விளங்குபவர் சுக்கிர பகவான். நவம்பர் 6–ஆம் தேதி கன்னி ராசிக்குள் வக்ர நிலையில் நுழையும் சுக்கிரன், நவம்பர் 14–ஆம் தேதி வக்ர நிவர்த்தி அடைகிறார். அதேபோல் நவம்பர் 25–ஆம் தேதி கேது பகவான் சிம்ம ராசியிலிருந்து கடக ராசிக்குப் பெயர்ச்சியடைகிறார். இந்த இரு கிரக மாற்றங்களும் குறிப்பிட்ட 8 ராசிகளுக்கு சாதகமான பலன்களை அளிக்கும் என ஜோதிடர்கள் கணித்துள்ளனர்.

சுக்கிரன் அருளால் அதிர்ஷ்டம் பெறும் 4 ராசிகள்!

மேஷம் பணக்கஷ்டம் நீங்கி செல்வம் சேரும்!

மேஷ ராசிக்காரர்களுக்கு நீண்ட நாட்களாக இருந்து வந்த பண நெருக்கடிகள் படிப்படியாகக் குறையும். பணியிடத்தில் உயர் அதிகாரிகளின் ஆதரவு கிடைப்பதுடன், உழைப்புக்கேற்ற அங்கீகாரமும் கிடைக்கலாம். கூட்டுத் தொழில் செய்பவர்களுக்கு புதிய ஒப்பந்தங்கள் மூலம் லாபம் அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். தேவையற்ற செலவுகளைக் கட்டுப்படுத்துவதால் சேமிப்பு உயரும். புதிய முயற்சிகளைத் தொடங்குவதற்கான வாய்ப்புகளும் உருவாகலாம்.

கன்னி பதவி உயர்வு, எதிர்பாராத பணவரவு!

கன்னி ராசியின் முதல் வீட்டில் சுக்கிரன் வக்ர நிவர்த்தி அடைவதால் தொழில் மற்றும் வேலைவாய்ப்பில் முன்னேற்றம் ஏற்படலாம். நீண்ட நாட்களாக எதிர்பார்த்த பதவி உயர்வு அல்லது புதிய பொறுப்புகள் கிடைக்க வாய்ப்புள்ளது. வியாபாரிகளுக்கு லாபகரமான ஒப்பந்தங்கள் கைகூடும். கொடுத்த கடன் திரும்பக் கிடைக்கலாம். பொருளாதார நிலை மேம்படுவதுடன் வீடு, வாகனம் மற்றும் ஆடம்பரப் பொருட்கள் வாங்கும் எண்ணமும் நிறைவேற வாய்ப்புள்ளது.

துலாம் தொழிலில் வளர்ச்சி; வருமானம் உயரும்!

துலாம் ராசிக்காரர்களுக்கு சுக்கிரனின் நேர்கதி புதிய நம்பிக்கையையும் உற்சாகத்தையும் அளிக்கும். வேலை மாற்றம் செய்ய விரும்புபவர்களுக்கு சாதகமான தகவல்கள் கிடைக்கலாம். தொழிலில் புதிய வாய்ப்புகள் உருவாகும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைப்பதுடன், நீண்ட நாட்களாகத் தடைப்பட்டிருந்த பணிகள் மீண்டும் வேகமெடுக்கும். குடும்பத் தேவைகளை நிறைவேற்றும் அளவுக்கு வருமானம் அதிகரிக்க வாய்ப்புள்ளது. செலவுகளில் கவனம் தேவை.

கும்பம் புதிய வருமானம்; முதலீட்டில் லாபம்!

கும்ப ராசிக்காரர்களுக்கு தொழில் மற்றும் பொருளாதாரத்தில் சாதகமான மாற்றங்கள் ஏற்படலாம். புதிய வருமான வழிகள் உருவாகும். பணியிடத்தில் திறமைக்கான அங்கீகாரம் கிடைக்கும். தொழிலதிபர்களுக்கு புதிய வாடிக்கையாளர்கள் மற்றும் ஒப்பந்தங்கள் கிடைக்க வாய்ப்புள்ளது. ஏற்கெனவே செய்த முதலீடுகள் மூலம் ஆதாயம் கிடைக்கலாம். இருப்பினும் பெரிய முதலீடுகள் மற்றும் கடன் தொடர்பான முடிவுகளை அவசரப்படாமல் ஆராய்ந்து எடுப்பது நல்லது.

கேது பெயர்ச்சியால் அதிர்ஷ்டம் பெறும் 4 ராசிகள்!

ரிஷபம் தொட்ட காரியங்களில் வெற்றி!

ரிஷப ராசிக்காரர்களுக்கு கேது பெயர்ச்சி தொழில் வளர்ச்சிக்கான புதிய வாய்ப்புகளை உருவாக்கலாம். நீண்ட நாட்களாக முடங்கியிருந்த பணிகள் மீண்டும் தொடங்கும். வியாபாரிகளுக்கு புதிய ஒப்பந்தங்கள் கிடைப்பதுடன் வெளிநாட்டுத் தொடர்புகள் மூலமும் ஆதாயம் ஏற்படலாம். நீதிமன்ற வழக்குகளில் சாதகமான முன்னேற்றம் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. தன்னம்பிக்கை அதிகரித்து, திட்டமிட்ட காரியங்களை வெற்றிகரமாக முடிக்கும் சூழல் உருவாகலாம்.

மிதுனம் சொத்து சேர்க்கை; குடும்பத்தில் சுபயோகம்!

மிதுன ராசிக்காரர்களுக்கு குடும்பம் மற்றும் பொருளாதாரம் தொடர்பான விஷயங்களில் முன்னேற்றம் ஏற்படலாம். நீண்டகால சேமிப்புத் திட்டங்களில் ஆர்வம் அதிகரிக்கும். வீடு, நிலம் போன்ற சொத்துகள் வாங்குவதற்கான முயற்சிகள் கைகூட வாய்ப்புள்ளது. திருமண முயற்சிகளில் சாதகமான சூழல் உருவாகலாம். தம்பதியரிடையே புரிதலும் அன்பும் அதிகரிக்கும். குடும்பத்தில் திருமணம் உள்ளிட்ட சுப நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கான வாய்ப்புகள் உள்ளன.

விருச்சிகம் வேலை, வியாபாரத்தில் அதிரடி முன்னேற்றம்!


விருச்சிக ராசிக்காரர்களுக்கு கேது பெயர்ச்சி தொழில் வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை ஏற்படுத்தலாம். நீண்டகால உழைப்புக்கான பலன் கிடைக்கும். பணியிடத்தில் புதிய பொறுப்புகள் அல்லது உயர்ந்த பதவிக்கான வாய்ப்புகள் உருவாகலாம். சொந்தத் தொழில் தொடங்க நினைப்பவர்களுக்கு சாதகமான சூழல் அமையும். புதிய திட்டங்களைச் செயல்படுத்துவதில் வெற்றி கிடைக்கலாம். வாழ்க்கைத் துணையின் ஆதரவும் குடும்ப ஒற்றுமையும் அதிகரிக்கும்.

மகரம் அதிர்ஷ்டம் பெருகும்; தொழிலில் லாபம்!

மகர ராசிக்காரர்களுக்கு புதிய முயற்சிகளில் சாதகமான பலன்கள் கிடைக்கலாம். பணியிடத்தில் இருந்த தடைகள் குறைந்து, வேலைகளை விரைவாக முடிக்கும் வாய்ப்பு உருவாகும். வியாபாரிகளுக்கு புதிய வர்த்தக வாய்ப்புகளும் லாபமும் கிடைக்கலாம். தொழில் தொடர்பான பயணங்கள் பயனுள்ளதாக அமையும். நீண்ட நாட்களாகத் திட்டமிட்டிருந்த புதிய தொழில் முயற்சிகளைத் தொடங்குவதற்கான சூழல் உருவாகலாம். மனநிம்மதியும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும்.

ஜோதிடர்களின் கணிப்புப்படி, நவம்பர் 14–ஆம் தேதி சுக்கிரன் வக்ர நிவர்த்தியும், நவம்பர் 25–ஆம் தேதி கேது பெயர்ச்சியும் நிகழ்வதால் மேற்கண்ட 8 ராசிக்காரர்களுக்கு பணவரவு, தொழில் முன்னேற்றம், குடும்ப மகிழ்ச்சி உள்ளிட்ட நற்பலன்கள் கிடைக்கக்கூடும். இருப்பினும் தனிப்பட்ட ஜாதகத்தில் கிரகங்களின் நிலை, தசாபுத்தி ஆகியவற்றைப் பொறுத்து பலன்கள் மாறுபடும் என ஜோதிட மரபில் கூறப்படுகிறது.

நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



மழைக்காலத்தில் எலி காய்ச்சல் அபாயம்! 7 அறிகுறிகள் குறித்து எச்சரிக்கை!



தமிழகத்தில் வடகிழக்குப் பருவமழை காரணமாக பல்வேறு பகுதிகளில் மழைநீர் தேங்கியுள்ள நிலையில், எலி காய்ச்சல் (லெப்டோஸ்பைரோசிஸ்) பரவும் அபாயம் குறித்து சுகாதார விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

எலி, நாய் உள்ளிட்ட விலங்குகளின் சிறுநீரால் மாசுபட்ட நீர், உடலில் உள்ள காயங்கள் மற்றும் கண், மூக்கு, வாய் வழியாகத் தொற்று ஏற்படுத்தலாம்.

முக்கிய 7 அறிகுறிகள்: அதிக காய்ச்சல், தலைவலி, தசை மற்றும் மூட்டு வலி, வாந்தி அல்லது குமட்டல், குளிர் நடுக்கம், வயிற்றுப்போக்கு, கண்கள் சிவத்தல்.

உரிய நேரத்தில் சிகிச்சை பெறாவிட்டால் சிறுநீரகம், கல்லீரல் மற்றும் நுரையீரல் பாதிப்புகள் ஏற்பட்டு உயிருக்கு ஆபத்து ஏற்படலாம்.

தடுப்பு நடவடிக்கைகள்: தேங்கிய மழைநீர், சேற்றில் நடப்பதைத் தவிர்க்க வேண்டும். அவசியம் ஏற்பட்டால் பாதுகாப்புக் காலணிகள் அணிய வேண்டும். காயங்களை மூடிப் பாதுகாக்க வேண்டும். மாசுபட்ட நீரில் சென்றுவந்தால் சோப்பால் நன்கு கழுவ வேண்டும்.

மழைநீருடன் தொடர்பு ஏற்பட்ட பிறகு காய்ச்சல் உள்ளிட்ட அறிகுறிகள் தென்பட்டால், சுயமாக மருந்து எடுத்துக்கொள்ளாமல் உடனடியாக மருத்துவரை அணுக வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது.

கவின் ஆணவ கொலை வழக்கு: தமிழக அரசின் மேல்முறையீட்டு மனு தள்ளுபடி!

சென்னை, நவ. 05– தூத்துக்குடி மாவட்டம் ஏரல் அருகிலுள்ள ஆறுமுகமங்கலத்தைச் சேர்ந்த பட்டியலினத்தைச் சேர்ந்த கவினும், பாளையங்கோட்டையைச் சேர்ந்த சித்த மருத்துவர் எஸ். சுபாஷினியும் காதலித்த நிலையில், கடந்த ஆண்டு ஜூலை 27–ஆம் தேதி கவின் படுகொலை செய்யப்பட்டார். அந்த சம்பவம் தொடர்பாக சுபாஷினியின் இளைய சகோதரர் சுர்ஜித் கைது செய்யப்பட்டார். அதைத் தொடர்ந்து அவரது உறவினர் ஜெயபால், பெற்றோர்களான சரவணன், கிருஷ்ணகுமாரி ஆகியோர் இந்த வழக்கில் சேர்க்கப்பட்டு கைது செய்யப்பட்டனர். இதில் சரவணனும், கிருஷ்ணகுமாரியும் காவல்துறையில் உதவி ஆய்வாளர்களாக பணியாற்றி வருபவர்கள் என்பதால், ஆரம்பத்தில் பாளையங்கோட்டை காவல் நிலையத்தில் விசாரிக்கப்பட்டு வந்த இந்த வழக்கு பின்னர் சிபிசிஐடி வசம் ஒப்படைக்கப்பட்டது. இதேவேளையில், இருவரும் பணியில் இருந்து இடைநீக்கம் செய்யப்பட்டனர். , திருநெல்வேலியில் உள்ள வன்கொடுமை தடுப்புச் சட்ட வழக்குகளை விசாரிக்கும் கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் சிபிசிஐடி தாக்கல் செய்த குற்றப்பத்திரிகையின்படி, குற்றஞ்சாட்டப்பட்ட சரவணனும் கிருஷ்ணகுமாரியும் தங்கள் மகளுக்கும் கவினுக்கும் இடையேயான காதலை 2016–17 முதல் அறிந்திருந்தனர் என்றும் சரவணன் தனது மகளை எச்சரித்ததுடன், 2018–19 காலப்பகுதியில் கவினிடமும் தொலைபேசியில் பேசியுள்ளதாக கூறப்பட்டுள்ளது. மேலும், கவினின் தாயை கிருஷ்ணகுமாரி தொடர்பு கொண்டு எச்சரித்துள்ளதாகவும் குற்றப்பத்திரிகையில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. ஆனால், பெண்ணின் பெற்றோருக்கும் சுர்ஜித்துக்கும் இடையே நடந்ததாக கூறப்படும் சந்திப்பையோ உரையாடலையோ நிரூபிக்க நேரடி சாட்சிகளோ தடயங்களோ இல்லை என்று தெரிய வருவதால், சரவணன், கிருஷ்ணகுமாரிக்கு எதிரான குற்றப்பத்திரிகையை ரத்து செய்வதாக உயர்நீதிமன்றம் அறிவித்தது.

இந்த உத்தரவை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுவில், வழக்கில் புலனாய்வாளர்கள் கண்டறிந்த பல்வேறு அம்சங்களையும் உயர்நீதிமன்றம் கவனத்தில் கொள்ளாமல் குற்றப்பத்திரிகையில் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை ரத்து செய்ய உத்தரவிட்டுள்ளது. அந்த உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டது.

இந்த மேல்முறையீட்டு மனு இன்று விசாரணைக்கு வந்த நிலையில், சென்னை உயர் நீதிமன்றத்தின் உத்தரவை ரத்து செய்ய மறுப்பு தெரிவித்து, தமிழக அரசின் மனுவை உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

அக்னி வீரர்களுக்கு பணி நீட்டிப்பு!

புதுடெல்லி, நவ. 05– அக்னி திட்டத்தின் கீழ் இருந்து 6 ஆண்டுகளாக நீட்டிக்க மத்திய அமைச்சர



முப்படைகளில் பணியாற்றும் அக்னி வீரர்களின் பணிக்காலத்தை 4 ஆண்டுகளில் ரவை ஒப்புதல் அளித்துள்ளது. பிரதமர் மோடி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இம்முடிவு எடுக்கப்பட்டது. ஏற்கெனவே 25 சதவீத வீரர்களுக்கு நிரந்தரப் பணி வழங்கப்பட்ட நிலையில், மீதமுள்ள 75 சதவீத வீரர்களுக்கு கூடுதலாக 2 ஆண்டுகள் பணி நீட்டிப்பு வழங்கப்படவுள்ளது. நீட்டிக்கப்பட்ட பணிக்காலத்துக்குப் பிறகு தகுதி மற்றும் விருப்பத்தின் அடிப்படையில் நிரந்தர நியமனம் பெறவும் வாய்ப்பு வழங்கப்படும். அடுத்த மாதம் பணிக்காலம் முடிவடையவிருந்த சுமார் 18,000 வீரர்கள் இதனால் பயனடைவார்கள். இம்முடிவுக்காக பிரதமர் மோடிக்கு பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் நன்றி தெரிவித்துள்ளார்.

நாகை-இலங்கை கப்பல் கட்டணம் குறைப்பு!



நாகப்பட்டினம்–இலங்கை காங்கேசன்துறை இடையிலான பயணிகள் கப்பல் கட்டணம் ரூ.6,000–லிருந்து ரூ.5,500 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. பண்டிகைக் கால சலுகையாக இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. மேலும், பயணிகள் எடுத்துச் செல்லும் லக்கேஜ் எடை 10 கிலோவிலிருந்து 30 கிலோவாகவும், கைப்பை எடை 7 கிலோவாகவும் உயர்த்தப்பட்டுள்ளது. கடந்த இரண்டரை ஆண்டுகளில் 55,310 பேர் இக்கப்பல் சேவையைப் பயன்படுத்தியுள்ளதாக கப்பல் நிறுவனம் தெரிவித்துள்ளது.

வேலை வாய்ப்பு தமிழக நிறுவனத்தில் 58 வேலைவாய்ப்புகள்!



மத்திய அரசின் பொதுத்துறை நிறுவனமான RITES Ltd–இல் 58 காலிப்பணியிடங்களை நிரப்ப வேலைவாய்ப்பு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு உள்ளிட்ட தென் மாநிலங்களில் பணிபுரிய வாய்ப்பு வழங்கப்படுகிறது.

பணி விவரங்கள்:

உதவி மேலாளர் (Mechanical) 27 இடங்கள். பணியிடம்: தமிழ்நாடு.

விண்ணப்பிக்க கடைசி நாள்: 20.11.2026.

மூத்த தொழில்நுட்ப உதவியாளர் (STA) 31 இடங்கள். பணியிடம்: தமிழ்நாடு, புதுச்சேரி, கேரளா, கர்நாடகா, ஆந்திரா, தெலங்கானா மற்றும் லட்சத்தீவு.

விண்ணப்பிக்க கடைசி நாள்: 22.11.2026.

இரண்டு பணிகளும் ஒப்பந்த அடிப்படையில் நிரப்பப்படுகின்றன. தகுதியும் விருப்பமும் உள்ளவர்கள் கல்வித்தகுதி, வயது வரம்பு மற்றும் தேர்வு முறையை அதிகாரப்பூர்வ அறிவிப்பில் சரிபார்த்து ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம்.

இணையதளம்: www.rites.com



திருப்பூர் வடக்கு சட்டமன்றத் தொகுதி மாநகராட்சி 6 வது வார்டுக்கு உட்பட்ட நல்லாத்து பாளையம் அருகே புதிய அரசு பள்ளி கட்டட திறப்பு விழா வெகு சிறப்பாக நடைபெற்றது விழாவினை பொறுப்பு மேயர் பாலசுப்பிரமணியம்.2 வது மண்டல தலைவர் தம்பி ஆர் கோவிந்தராஜ். கவுன்சிலர் கோபால்சாமி. ஆகியோர் ரிப்பன் வெட்டி துவக்கி வைத்தனர் இந்த விழாவில் பல்வேறு அரசியல் கட்சி நிர்வாகிகளும் ஊர் பொதுமக்களும் மாநகராட்சி அதிகாரிகளும் மாணவச் செல்வங்களும் பங்கேற்று சிறப்பித்தனர்...



மாண்புமிகு வணிகவரி மற்றும் பத்திரப்பதிவுத்துறை அமைச்சர் திரு.த.மோகேஷ் தமிழ்செல்வன் MBA., அவர்கள் இராசிபுரம் நித்திய சுமங்கலி மாரியம்மன் திருக்கோவில் திருவிழாவில் கலந்து கொண்டு, சுவாமி தரிசனம் செய்து, பூ மிதி திருவிழாவினை கற்பூரம் ஏற்றி துவக்கி வைத்தார்.

தீபாவளி சிறப்பு ரயில்கள் அறிவிப்பு!



சென்னை. நவ. 05– தீபாவளி பண்டிகையையொட்டி பயணிகள் கூட்டத்தைச் சமாளிக்க தெற்கு ரயில்வே சிறப்பு ரயில்களை அறிவித்துள்ளது. நவம்பர் 6–ஆம் தேதி இரவு 7.30 மணிக்கு தாம்பரத்திலிருந்து திருநெல்வேலிக்கு சிறப்பு விரைவு ரயில் இயக்கப்படுகிறது. மறுமார்க்கத்தில் நவம்பர் 9–ஆம் தேதி திருநெல்வேலியிலிருந்து புறப்படும்.

மேலும், சென்னை எழும்பூர்திருநெல்வேலி, தாம்பரம் மானாமதுரை, எழும்பூர்திருச்சி இடையே நவம்பர் 6 முதல் 10 வரை பல்வேறு நேரங்களில் முன்பதிவில்லாத சிறப்பு மெமு ரயில்கள் இயக்கப்படுகின்றன. இவை விழுப்புரம், திருச்சி, திண்டுக்கல், மதுரை உள்ளிட்ட முக்கிய நிலையங்களில் நின்று செல்லும் என தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.



பழனி காங்கிரஸ் நகர தலைவராக தேர்வு செய்யப்பட்ட, கவுன்சிலர் பத்மினி முருகானந்தத்திற்கு, மாவட்ட அரசியல் விவகார குழு உறுப்பினரும், முன்னாள் கவுன்சிலருமான எஸ்.சுந்தர், மாவட்ட பொதுச் செயலாளர் ராமநாதகிருஷ்ணன், இளைஞர் காங்கிரஸ் தலைவர் பாலகுமார் ஆகியோர் பொன்னாடை போர்த்தினர்.

மீனவர்களுக்கு ரூ.7,000 நிவாரணம்!



சென்னை, நவ. 05– தமிழகத்தில் மீன்பிடி குறைவு கால நிவாரணத் தொகை ரூ.7 ஆயிரமாக உயர்த்தப்பட்டு, நடப்பாண்டு முதல் வழங்கப்படும் என மீன்வளத் துறை அமைச்சர் ஸ்ரீநாத் அறிவித்துள்ளார். இதன்மூலம் 14 கடலோர மாவட்டங்களைச் சேர்ந்த 1.98 லட்சம் மீனவக் குடும்பங்கள் பயனடைய உள்ளன. இதற்காக ரூ.138.75 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், மீனவர் மற்றும் மீனவ மகளிர் சேமிப்புத் திட்டங்களுக்கு ரூ.123.24 கோடி ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

கடலில் காணாமல் போன இரு மீனவர்களின் குடும்பங்களுக்கு அவசர நிவாரண உதவிக்கான ஆணைகளும், மீனவர்களுக்கு ரூ.75 ஆயிரம் மதிப்புள்ள குளிர்காப்புப் பெட்டிகளுடன் கூடிய 35 இருசக்கர வாகனங்களும் வழங்கப்பட்டன.

சினிமா துளிகள்..!

ராமாயணம்: பிரமாண்ட அசத்தல்! மிரட்டல்!



வால்மீகி ராமாயணத்தை அடிப்படையாகக் கொண்டு இயக்குநர் நித்திஷ் திவாரி இயக்கியுள்ள 'ராமாயணம்' திரைப்படம் தீபாவளி வெளியீடாகத் திரைக்கு வந்துள்ளது. தமிழ், தெலுங்கு, ஹிந்தி, கன்னடம், ஆங்கிலம் உள்ளிட்ட மொழிகளில் வெளியாகியுள்ள இப்படத்தில் ரன்பீர் கபூர், சாய் பல்லவி, யஷ், ரவி துபே, ரகுல் பிரீத் சிங், ஷோபனா உள்ளிட்டோர் நடித்துள்ளனர்.

ராமனாக ரன்பீர் கபூர் அமைதியான நடிப்பையும், சீதையாக சாய் பல்லவி உணர்ச்சிபூர்வமான நடிப்பையும் வெளிப்படுத்தியுள்ளனர். ராவணனாக யஷ் தனது மிரட்டலான உடல்மொழியால் ரசிகர்களைக் கவர்கிறார். ரவி துபேயின் நகைச்சுவைக் காட்சிகளும் ரசிக்க வைக்கின்றன.

ராவணனின் பத்து தலைகள் தோன்றும் காட்சி, ராமனின் வில்வித்தை, ஜடாயுவின் சண்டை, புஷ்பக விமானத்தில் சீதை கடத்தப்படும் காட்சிகள் பிரமாண்டமாக அமைந்துள்ளன. ஹான்ஸ் ஜிம்மரின் பின்னணி இசை, ஏ.ஆர்.ரகுமானின் பாடல்கள், அதிநவீன கிராபிக்ஸ் மற்றும் ஒலியமைப்பு படத்திற்குப் பெரும் பலம் சேர்க்கின்றன.

தமிழ் வசனங்களும் மொழிமாற்றமும் சிறப்பாக அமைந்துள்ளன. குறிப்பாக ஐமேக்ஸ் திரைகளில் படத்தின் பிரமாண்டம் ரசிகர்களுக்குச் சிறந்த அனுபவத்தை அளிக்கிறது. இருப்பினும், ராமன் வனவாசம் செல்லும் வரையிலான திரைக்கதை மெதுவாக நகர்கிறது. சில காட்சிகளில் செயற்கையான கிராபிக்ஸ் வெளிப்படுவதும் குறையாக உள்ளது.

இரண்டு பாகங்களாக உருவாகியுள்ள இப்படத்தின் முதல் பாகம் சீதை கடத்தப்படுவதுடன் நிறைவடைகிறது. ராமனின் சபதம் அடுத்த பாகத்திற்கான எதிர்பார்ப்பை அதிகரிக்கிறது.

மொத்தத்தில், பழமையான இதிகாசத்தை நவீன தொழில்நுட்பத்துடன் பிரமாண்டமாகக் காட்சிப்படுத்தியுள்ள 'ராமாயணம்', காட்சியமைப்பிலும் இசையிலும் ரசிகர்களைக் கவரும் திரைப்படமாக அமைந்துள்ளது.

ஒட்டன்சத்திரம் ஐஎன்டியுசி அலுவலகத்தில் முன்னாள் வாரியத் தலைவர் பொன் குமாருக்கு சிறப்பான வரவேற்பு!



ஒட்டன்சத்திரம் நவ. 05– திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரத்தில் உள்ள ஐஎன்டியுசி திண்டுக்கல் மேற்கு மாவட்ட தொழிற்சங்க காங்கிரஸ் கமிட்டி அலுவலகத்திற்கு, நவ.2–ல் வருகை புரிந்த தொழிலாளர் தோழரும், முன்னாள் வாரியத் தலைவருமான பொன்குமாருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. அப்போது ஐஎன்டியுசி திண்டுக்கல் மேற்கு மாவட்டத் தலைவர் ஒடவை ஆர். பிச்சைமுத்து, பொன்குமாருக்கு சால்வை அணிவித்து மரியாதையுடன் வரவேற்றார்.

இந்நிகழ்ச்சியில் ஒட்டன்சத்திரம் நகர காங்கிரஸ் கமிட்டித் தலைவரும், நகர்மன்ற உறுப்பினருமான முகம்மது மீரான், மாநிலப் பொதுச்செயலாளர் குருநாகலிங்கம், சட்டமேதை அம்பேத்கர் அமைப்புசாரா மற்றும் கட்டுமானத் தொழிலாளர்கள் நல உரிமைச் சங்கத்தின் சார்பில் சி. நடராஜ் மற்றும் சங்க நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கொடைக்கானல் மலைச்சாலையில் நீளமான வாகனங்களுக்குத் தடை!



கொடைக்கானல், நவ. 05– மலைச்சாலைகளில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் வகையில், டிசம்பர் 1 முதல் 12 மீட்டருக்கு மேல் நீளமுள்ள பயணிகள் மற்றும் சரக்கு வாகனங்கள் செல்லத் தடை விதித்து திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் துர்கா உத்தரவிட்டுள்ளார்.

சுற்றுலாப் பயணிகளின் வருகையால் ஏற்படும் போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்த ஏற்கெனவே இ–பாஸ் நடைமுறையில் உள்ளது. கடந்த 2024–ஆம் ஆண்டு விதிக்கப்பட்ட நீளமான வாகனங்களுக்கான தடை முறையாகப் பின்பற்றப்படாததால், மீண்டும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. சுற்றுலாப் பயணிகளும் வியாபாரிகளும் 12 மீட்டருக்குக் குறைவான நீளமுள்ள வாகனங்களைப் பயன்படுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882
மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ் பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது
சென்னை
Ph: 98659 88881




இன்றைய கார்ட்டூன்



அன்பில் மகேஷுக்கு ஜாமின் கிடைக்குமா?

சென்னை, நவ. 05–

தனியார் பள்ளிகளுக்கு நிரந்தர அங்கீகாரம் பெற்றுத்தருவதாக கூறி ரூ.400 கோடி அளவுக்கு முறைகேடாக பணம் வசூலித்தது தொடர்பான வழக்கில் தி.மு.க. முன்னாள் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி கைது செய்யப்பட்டு புழல் சிறையில் அடைக்கப்பட்டு இருந்தார்.



இந்த வழக்கில் அன்பில் மகேஷை 5 நாட்கள் போலீஸ் காவலில் விசாரிக்க அனுமதிக்க வேண்டும் என சென்னை மத்திய குற்றப்பிரிவு போலீசார், ஊழல் தடுப்பு சிறப்பு கோர்ட்டில் மனு தாக்கல் செய்து இருந்தனர். இதையடுத்து, அன்பில் மகேஷை 3 நாட்கள் போலீஸ் காவலில் வைத்து விசாரிக்க அனுமதி வழங்கி சென்னை சிறப்பு கோர்ட்டு உத்தரவிட்டது. அன்பில் மகேஷ் ஜாமின் கோரிய மனுவை 5–ந்தேதிக்கு தள்ளி வைத்து நீதிபதி உத்தரவிட்டார்.

இந்நிலையில், அன்பில் மகேஷ் ஜாமின் கோரிய மனு மீதான விசாரணை சிறப்பு நீதிமன்ற நீதிபதி சத்தியமூர்த்தி முன்பு தொடங்கியது.

அன்பில் மகேஷ் சார்பில் மூத்த வழக்கறிஞர் அபுகுமார் ராஜரத்தினம் வாதத்தில்,

* அன்பில் மகேஷிடம் சுமார் 8 மணி நேரம் விசாரணை நடத்தப்பட்டது. விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு அளிக்கப்பட்டது.

* போலீசார் காவலில் எடுத்து விசாரித்தபோது கேட்டப்பட்ட அனைத்து கேள்விகளும் அன்பில் மகேஷ் தரப்பில் முறையாக பதில் அளிக்கப்பட்டது.

* திருச்சி, சென்னையில் இருந்து அன்பில் மகேஷின் ஆடிட்டர்கள் வந்து விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு அளித்தனர்.

* சமூகத்தில் அந்தஸ்து உள்ள மனிதராக இருந்தாலும் அன்பில் மகேஷ் தலைமறைவாகவில்லை, ஓடி ஒளியவில்லை, விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு அளித்துள்ளார்.

* சாட்சிகளை கலைக்கவில்லை எனவே ஜாமின் வழங்க வேண்டும்.

* தனியார் பள்ளிகளுக்கு அங்கீகாரம் பெற முறைகேடாக பணம் பெற்ற இந்த வழக்கில் A1 அரசக்குமார் தான்.

* புகார்களின்படி அரசக்குமார் தான் பணம் பெற்று மோசடி செய்ததாக உள்ளது.

* அன்பில் மகேஷ் கைகள் கறைபடியாதவை. அவர் மீது கூறப்பட்ட அனைத்து குற்றச்சாட்டுகளும் பொய்யான குற்றச்சாட்டுகள்.

* ஊழல் புகார்கள் இனி லஞ்ச ஒழிப்புத்துறையில் அளிக்காமல் குற்றப்பிரிவிடம் அளிப்பார்களா?

* விலைவாசியைப்போல் இந்த வழக்கில் 100, 200, 400, 600, 800 கோடி என வழக்கின் தொகையும் ஏறிக்கொண்டே போகிறது.

* அன்பில் மகேஷ் மீதான வழக்கில் ஊடக விசாரணை தான் நடக்கிறது.

* பள்ளிகளின் அங்கீகாரம் புதுப்பிக்கும் விவகாரத்தில் சட்டத்தை கடுமையாக ஆக்கியதுதான் அன்பில் செய்த தவறா?

* அங்கீகாரம் வழங்குவது தொடர்பான அரசாணை பல துறை அதிகாரிகளை கடந்து சென்றுள்ளது.

* பல துறைகளில் அரசாணை வெளியாகிறது, அப்படி என்றால் அவர்கள் எல்லாம் சதியில் ஈடுபட்டார்களா? என்று கூறினார்.

போலி இந்திய கரன்சி நோட்டுகள் பறிமுதல்; 8 இடங்களில் என்.ஐ.ஏ. சோதனை!

புதுடெல்லி, நவ. 05–

போலி இந்திய கரன்சி நோட்டுகள் பறிமுதல் தொடர்பாக நாட்டின் பல்வேறு பகுதிகளில் தேசிய புலனாய்வு முகமை (என்.ஐ.ஏ.) நேற்று அதிரடி சோதனை நடத்தியது. இதன்படி, பீகார், ஜார்கண்ட் மற்றும் மேற்கு வங்காளத்தில் உள்ள எட்டு இடங்களில் இந்த சோதனை நடத்தப்பட்டது.



இதில், பீகாரின் கயா நகரில் 3 இடங்களிலும், அவுரங்காபா த்தில் 2 இடங்களிலும், ஜார்கண்டின் ஹசாரிபாக்கில் 2 இடங்களிலும், மேற்கு வங்காளத்தின் மால்டா நகரில் ஒரிடத்திலும் சோதனை நடந்தது.

பீகாரின் அவுரங்காபாத் நகரில் மதன்பூர் காவல் நிலையத்தில் ரூ.2.48 லட்சம் மதிப்பிலான போலி கரன்சி நோட்டுகள் பறிமுதலை தொடர்ந்தே இந்த சோதனை நடந்துள்ளது. இதில் டிஜிட்டல் உபகரணங்கள், ஆவணங்கள் மற்றும் வங்காளதேச கரன்சி நோட்டுகள் உள்ளிட்ட பல்வேறு பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

இந்த சம்பவத்தில் 4 பேருக்கு எதிராக வழக்கு ஒன்றும் பதிவு செய்யப்பட்டது. அவர்கள் இந்த போலி இந்திய கரன்சி நோட்டுகள் கடத்தலில் ஈடுபட்டு உள்ளனர் என்று என்.ஐ.ஏ. அதிகாரிகள் தெரிவித்தனர்.

குழந்தை தொழிலாளர் தடுப்பு சட்டம்.. சிறப்பு பிரிவு அமைக்க மத்திய அரசுக்கு உச்சநீதிமன்றம் உத்தரவு!

புதுடெல்லி, நவ. 05–

1986 ஆம் ஆண்டின் அசல் குழந்தைத் தொழிலாளர் சட்டத்தை திருத்தி, குழந்தைத் தொழிலாளர் (தடை மற்றும் ஒழுங்குமுறை) திருத்தச் சட்டம் 2016 அமலுக்கு வந்தது.

இது 14 வயதுக்குட்பட்ட குழந்தைகளை அனைத்து வகையான வேலைவாய்ப்புகளிலும் செயல்முறைகளிலும் பணியமர்த்துவதை முற்றிலுமாக தடை செய்கிறது.

மேலும் இதன் விதிகள் அபாயகரமான தொழில்களில் குழந்தைத் தொழிலாளர்களை பணியமர்த்துவதை தடைசெய்கிறது.

'ஹெல்த் ஃபார் மில்லியன்ஸ்' என்ற தன்னார்வ அமைப்பு தாக்கல் செய்த மனுவை நேற்று உச்ச நீதிமன்ற நீதிபதிகள் எஸ்.வி.என். பட்டி மற்றும் என்.வி. அஞ்சாரியா ஆகியோர் அடங்கிய அமர்வு விசாரித்தது.



ஃபார் மில்லியன்ஸ் அமைப்பு 2009ஆம் ஆண்டு இந்த மனுவை தாக்கல் செய்திருந்தது. அதில், 1986 சட்டத்தில் குடும்பத் தொழில்கள் மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் குழந்தைகள் வேலை செய்ய வழங்கப்பட்டிருந்த சில விதிவிலக்குகளின் அரசியலமைப்புச் செல்லுபடித்தன்மையை கேள்விக்கு உட்படுத்தியிருந்தது.

குழந்தைத் தொழிலாளர் முறைக்கு எதிரான சட்டத்தில் இருந்த விதிவிலக்குகளை நீக்கக் கோரியும், உழைக்கும் குழந்தைகளுக்கு கல்வி மற்றும் மதிய உணவு வசதிகளை வழங்கக் கோரியும் வலியுறுத்தியிருந்தது.

ஏற்கனவே 2016 கொண்டுவரப்பட்ட சட்டத்திருத்தத்தில் இந்த பிரச்சினைகள் நிவர்த்தி செய்யப்பட்ட நிலையில் சட்ட விதிகள் செயல்படுத்தப்படுவதை கண்காணிக்க, சிறப்புப் பிரிவை அமைக்குமாறு மத்திய அரசுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

"குழந்தைகள் மற்றும் இளம் பருவத்தினரின் உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்கில், சட்டத்தின் விதிகள் செயல்படுத்தப்படுவதைக் கண்காணிக்கவும், மாநிலங்களின் தலைமைச் செயலாளர்கள் மூலம் அமலாக்க முகமைகளுக்கு வழிகாட்டுதல்களை வழங்கவும் ஒரு சிறப்புப் பிரிவை அமைக்குமாறு மத்திய அரசுக்கு நாங்கள் உத்தரவிடுகிறோம்" என்று நீதிபதிகள் தெரிவித்தனர்.

எம்.ஜி.ஆருடன் நடித்த தாய்லாந்து நடிகை மரணம்!



பாங்காக்,. நவ. 05–

எம்.ஜி.ஆர். நடித்த 'உலகம் சுற்றும் வாலிபன்' திரைப்படத்தில் இடம்பெற்ற 'பச்சைக்கிளி முத்துச்சரம்' பாடலில் நடித்து பிரபலமான தாய்லாந்து நடிகை மெட்டா ரூங்ராட் (83) உயிரிழந்தார்.

180–க்கும் மேற்பட்ட திரைப்படங்களில் நடித்துள்ள இவர், 'ஆசியாவின் கருப்பு முத்து' என ரசிகர்களால் அழைக்கப்பட்டார். சுமார் 40 ஆண்டுகள் திரைத்துறையில் பணியாற்றி பல்வேறு விருதுகளைப் பெற்றுள்ளார்.

கடந்த சில ஆண்டுகளாக உடல்நலப் பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டிருந்த அவர், நவம்பர் 3–ஆம் தேதி பாங்காக்கில் உள்ள தனது வீட்டில் துப்பாக்கியால் சுட்டுத் தற்கொலை செய்துகொண்டதாகத் தகவல் வெளியாகியுள்ளது. அவரது மரணம் குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

குழந்தைகள் தின கொண்டாட்டம்: மாணவர்களுக்கு 13-ந்தேதியன்று தவறாமல் 'கேக்' வழங்க உத்தரவு!

சென்னை, நவ. 05–

குழந்தைகள் தினத்தைக் கொண்டாடும் வகையில் மாணவ–மாணவிகளுக்கு 13–ந்தேதியன்று தவறாமல் 'கேக்' வழங்க வேண்டும் என்று கல்வித்துறை உத்தரவு பிறப்பித்துள்ளது.

இதுதொடர்பாக தொடக்கக்கல்வி இயக்ககம் சார்பில், அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு அனுப்பப்பட்டுள்ள சுற்றறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:–

குழந்தைகள் தினத்தைக் கொண்டாடும் வகையில் அரசு, அரசு உதவிபெறும் பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள், ஆசிரியர்கள், ஆசிரியர் அல்லாத பணியாளர்கள் என மொத்தம் 61 லட்சத்து 84 ஆயிரத்து 566 பேருக்கு கேக் வழங்க ரூ.9.27 கோடி நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வழங்கப்பட்டு இருக்கிறது.

இதையடுத்து வருகிற 10–ந்தேதிக்குள் விற்பனையாளர்கள் 38 மாவட்டங்களிலும் உள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கிடங்கில் ஒப்படைக்க இருக்கிறார்கள். அதே நாளுக்குள் பாடநூல் கழகம் மூலம் வாழ்த்து அட்டைகள் முதன்மைக்கல்வி அலுவலர் அலுவலகத்துக்கு வந்துசேர்ந்துவிடும்.



தொடர்ந்து வருகிற 11, 12–ந்தேதிகளில் கிடங்குகளிலிருந்து பள்ளிகளுக்கு கேக்குகள், மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலகத்திலிருந்து வாழ்த்து அட்டைகள் கொண்டு செல்லப்படும். இதையடுத்து வருகிற 13–ந்தேதி (வெள்ளிக்கிழமை) பயனாளிகள் அனைவருக்கும் கேக்குகள் மற்றும் மாணவர்களுக்கு மட்டும் வாழ்த்து அட்டைகளுடன் கேக்கும் வழங்க வேண்டும்.

உணவு ஒவ்வாமை அல்லது உணவுக்கட்டுப்பாடு உள்ள மாணவர்களை முன்கூட்டியே கண்டறிந்து தகுந்த ஏற்பாடுகள் செய்யவேண்டும். மாணவர்கள் கைகளைக் கழுவிய பின்னர் பெற வேண்டும். வினியோகம் ஒழுங்காகவும், சமமாகவும் நடைபெற வேண்டும்.

அனைத்து மாணவர்களுக்கும் வாழ்த்து அட்டை கிடைத்துள்ளதை உறுதி செய்யவேண்டும். இத்திட்டத்தை தனிப்பட்ட முறையில் கவனம் செலுத்தி, இது சார்ந்த பணிகளில் எவ்வித புகார்களுக்கும் இடமளிக்காத வகையில் செயல்பட வேண்டும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தங்கம் விலை அதிரடி உயர்வு!



சென்னை, நவ. 05–

சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை (நவ. 5) சவரனுக்கு ரூ. 2,280 அதிகரித்து ஒரு சவரன் ரூ. 1,07,080–க்கும், கிராமுக்கு ரூ. 285 உயர்ந்து ஒரு கிராம் ரூ. 13,385–க்கும் விற்பனையாகிறது. மேலும், கடந்த நாள்களில் மட்டும் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ. 4,680 உயர்ந்துள்ளது. வெள்ளி விலையில் மாற்றமின்றி ஒரு கிராம் ரூ. 210–க்கும், ஒரு கிலோ (கட்டி வெள்ளி) ரூ. 2.10 லட்சத்துக்கும் விற்பனை செய்யப்படுகிறது.

விவசாயிகள் பயிர்க்கடன் தள்ளுபடி எப்போது? முதல்வருக்கு உதயநிதி கேள்வி!

சென்னை, 05–

தமிழக வெற்றிக் கழகத்தின் தேர்தல் வாக்குறுதிகளில் விவசாயி களின் பயிர்க்கடன் முழுமையாக தள்ளுபடி செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில், ரூ. 75,000 வரையிலான விவசாயிகளின் பயிர்க்கடன் மட்டுமே முழுமையாகத் தள்ளுபடி செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இதுதொடர்பாக எக்ஸ் பக்கத்தில் கேள்வி எழுப்பியுள்ள உதயநிதி ஸ்டாலின் தெரிவித்திருப்பதாவது: "விவசாயிகளுக்கான பயிர்க்கடன் தள்ளுபடி எப்போது அறிவிக்கப் போகிறார் முதல்வர்?

முழுப்பயிர்க்கடன் தள்ளுபடி செய்வோம் என்று வாக்குறுதி கொடுத்தவர்கள், ஆட்சிக்கு வந்த பிறகு, விவசாயிகளை ஸ்லாப் (Slab) வாரியாக பிரித்து சொற்ப அளவிலான தொகையை மட்டுமே தள்ளுபடி செய்வதாக அறிவித்தார்கள். அதனை தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகளும், விவசாய சங்கங்களும் கடுமையாக எதிர்த்தன.



இந்த சூழலில் விவசாயிகள் போராட்டம் நடத்திய போது, தாராபுரம், மதுராந்தகம் இடைத்தேர்தல் முடிந்து பேச்சுவார்த்தைக்கு அழைப்போம் என்று அமைச்சர்கள் கூறினார்கள்.

இடைத்தேர்தல் முடிந்து ஒரு மாதம் ஆகப்போகிறது. இன்னமும் விவசாயிகளுக்கான பயிர்க்கடன் தள்ளுபடி தொடர்பாக இந்த சோப்ளாங்கி அரசு வாய்த்திறக்காமல் இருப்பது ஏன்?

இந்த அரசின் மவுனத்தைப் பார்க்கும் போது, மறுபடியும் சொற்ப தொகையை மட்டும் தள்ளுபடி என்று அறிவிக்க முயற்சி நடப்பது போல் தெரிகிறது என்று விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

பண்டிகையைக் கூட கொண்டாட முடியாமல் சோகத்தில் இருக்கும் விவசாயிகள் அடுத்து வரும் பொங்கல் திருநாளையாவது நிம்மதியாக கொண்டாட முடியுமா என்ற வேதனையில் இருக்கிறார்கள்.

காவிரியில் முறையாக தண்ணீரை திறக்காமல் விவசாயிகளை வஞ்சித்ததால் குறுவை பொய்த்தது.

அப்போது, வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும் என்று சட்டப்பேரவையில் நாம் பேசிய போது, 'ஏற்கனவே கொடுத்துவிட்டோம்' என்று குறுவை சிறப்புத் தொகுப்பை வறட்சி நிவாரணம் என உறுதியுடன் பொய் சொன்ன முதலமைச்சர், இப்போது என்ன சொல்லப் போகிறார்?

இந்த முறையும் விவசாயிகளை ஏமாற்றாமல், திமுக ஆட்சிக்காலங்களில் போல, அனைத்து விவசாயிகளுக்குமான அனைத்துப் பயிர்க்கடனையும் இந்த அரசு ரத்து செய்ய வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

தீபாவளியை ஒட்டி சிறப்பு பேருந்துகள் இயக்கம்: அதிக கட்டணம் குறித்து புகார் அளிக்க தொலைப்பேசி எண்!

சென்னை, நவ. 05–

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு தமிழகம் முழுவதும் 15 ஆயிரத்து 901 சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட உள்ளதாக அமைச்சர் விஜய் தமிழன் பார்த்திபன் தெரிவித்துள்ளார்.

தீபாவளி பண்டிகை வருகிற 8–ந்தேதி கொண்டாடப்படுகிறது. இதற்காக சென்னை உள்ளிட்ட பெருநகரங்களில் வசிக்கும் பொதுமக்கள் சொந்த ஊருக்கு செல்வது வழக்கம்.

பொதுமக்கள் தங்களின் சொந்த ஊர்களுக்கு செல்வதற்கு வசதியாக, போக்குவரத்துத்துறையின் சார்பில் மேற்கொள்ளப்படும் சிறப்பு ஏற்பாடுகள் மற்றும் சிறப்பு பேருந்துகள் இயக்கம் குறித்த ஆலோசனை கூட்டம் போக்குவரத்துத்துறை அமைச்சர் விஜய் தமிழன் பார்த்திபன் தலைமையில் நந்தனம், மெட்ரோ ரெயில் நிறுவன தலைமை அலுவலகக் கூட்ட அரங்கில் நேற்று நடைபெற்றது. கூட்டத்திற்கு பின்னர் அமைச்சர் நிருபர்களிடம் கூறியதாவது:–

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு, சென்னையில் இருந்து 5–ந் தேதி (அதாவது இன்று) முதல் 7–ந் தேதி வரை வழக்கமாக இயக்கக்கூடிய 6,573 பேருந்துகளுடன் கூடுதலாக 9 ஆயிரத்து 86 சிறப்பு பேருந்துகள் (அதில், ஆயிரத்து 659 தனியார் ஒப்பந்த பேருந்துகள் அடங்கும்) என 3 நாட்களுக்கும் சேர்த்து மொத்தமாக 15 ஆயிரத்து 659 பேருந்துகள் இயக்கப்படும்.

அதேபோன்று, தீபாவளி பண்டிகை முடிந்த பின்னர், வருகிற 9–ந் தேதி மற்றும் 10–ந் தேதிகளில் பல்வேறு ஊர்களில் இருந்து சென்னைக்கு



வழக்கமாக இயக்கக்கூடிய 4 ஆயிரத்து 382 பேருந்துகளுடன் கூடுதலாக 6,815 சிறப்பு பேருந்துகள் (அதில், ஆயிரத்து 241 தனியார் ஒப்பந்த பேருந்துகள் அடங்கும்) என 2 நாட்களுக்கும் சேர்த்து மொத்தமாக 11 ஆயிரத்து 197 பேருந்துகள் இயக்கப்பட உள்ளன.

கடந்த ஆயுதபூஜை பண்டிகையின்போது. மக்கள் பல குறைகளை ஊடகங்கள் மூலம் தெரிவித்தனர். அவற்றை நாங்கள் கேட்டறிந்து அதற்கான வேலைகளை உடனடியாக செய்து கொடுத்ததன் மூலம் மக்கள் சிரமமின்றி பயணித்தார்கள். இப்போதும், ஊடகங்கள் வாயிலாக பெறப்பட்ட குறை, நிறைகளை இந்த கூட்டத்திலும் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுத்திருக்கிறோம்.

அதேபோன்று, தீபாவளி பண்டிகையை முன்னிட்டு அதிக கட்டணம் வசூலித்த 10 ஆம்னி பேருந்துகளை இப்போதே பறிமுதல் செய்து வைத்திருக்கிறோம். அதிக கட்டணம் வசூலித்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஆம்னி பேருந்து உரிமையாளர்களிடம் எச்சரித்து உள்ளோம். அதேபோன்று ஆயுதபூஜை நேரத்தில் அமைக்கப்பட்ட தற்காலிக பேருந்து நிலையங்களில் மழை பெய்ததால் சேறும் சகதியும் காணப்பட்டதால் பயணிகள் சிரமப்பட்டார்கள். அதனால், இந்த முறை மரப்பலகைகளை கொண்டு ஒன்றரை அடி உயரத்திற்கு நடைமேடை வசதி ஏற்பாடு செய்துள்ளோம். அதே போன்று, உட்காருவதற்கான இருக்கைகளையும் அதிகரித்து உள்ளோம். கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தில் செல்போன் சிக்னல் சரியாக கிடைக்கவில்லை என்ற புகார் எழுந்ததன் அடிப்படையில் ஆயுதபூஜையின் போது தற்காலிக செல்போன் சிக்னல் பூஸ்டர் டவர் ஒன்று வைக்கப்பட்டிருந்தது. இருப்பினும் சிக்னல் பிரச்சினை இருப்பதாக மக்கள் தெரிவித்துள்ளதால் இந்த முறை 2, 3 தற்காலிக செல்போன் சிக்னல் பூஸ்டர் டவர் அமைக்க திட்டமிட்டுள்ளோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழக பேருந்துகளின் இயக்கம் குறித்து அறிந்து கொள்வதற்கும், குறைகள் மற்றும் புகார்கள் தெரிவிப்பதற்கும் 94450 14436 என்ற செல்போன் எண் மற்றும் 149 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்களை 24 மணி நேரமும் தொடர்பு கொள்ளலாம்.

மேலும், ஆம்னி பேருந்துகளில் அதிக கட்டணம் வசூல் செய்தல் உள்ளிட்ட புகார்களுக்கு 1800 425 6151 கட்டணமில்லா தொலைபேசி எண் மற்றும் 93848 08333 என்ற வாட்ஸ்–அப் எண்ணில் புகார் அளிக்கலாம்.

கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தில் பயணிகள் நலன் கருதி 24 மணி நேரமும் செயல்படும் கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டுள்ளது. மேலும், பல்வேறு இடங்களில் 'மே ஐ ஹெல்ப் யூ' தகவல் மையங்கள் அமைத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020